**MCOP NO:2734/2020** **DATE: 14.07.2026**

எ.ம.சா : 1

பெயர் : திரு.புரந்தர் தாஸ்

த/பெ : திரு. திருமலை

வயது : 32

சாட்சி அமர்வு எழுத்தரால் உறுதி மொழி சட்டம் 1969 ன் பிரிவு 6 ன் படி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அதன் படி அவரது சாட்சியம் இன்று 14.07.2026 ல் பதிவு செய்யப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் இந்த மனுவில் 2 ம் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி ஆவேன். நான் 2 ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் உதவி மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான், அதை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் எமசாஆ 1 முதல் 5 வரை தாக்கல் செய்கிறேன்.

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. ஆவணங்களின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கிறேன். முதல் தகவல் அறிக்கையிலும், குற்றப்பத்திரிக்கையிலும் 1 ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் மீது தான் குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்தில் காயம் பட்டவர் 3 ம் தரப்பினர் என்றால் சரிதான். விபத்தின் போது 1 ம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கு காப்பீடு நிலுவையில் இருந்தது என்றால் நிபந்தனைக்கு உட்பட்டு நிலுவையில் இருந்தது. என்னுடைய பிரமாண பத்திரிக்கையில் மனுதாரர் விபத்தின் போது மது போதையில் இருந்ததாக சொல்லியதற்கு மருத்துவ ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்தானது திருத்தப்பட்ட மோட்டார் வாகன சட்டத்திற்கு முன்பாக நடந்துள்ளதால் மனுதாரருக்கு எங்கள் நிறுவனம் இழப்பீடு கொடுத்துவிட்டு அதை 1 ம் எதிர்மனுதாரரிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம் என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் காப்பீடு நிலுவையில் உள்ள காரணத்தினாலும் காயம் பட்ட நபர் 3–ம் தரப்பினர் என்பதாலும் எங்கள் நிறுவனம் தான் மனுதாரர்களுக்கு இழப்பீடு கொடுக்க வேண்டும் என்றால் சரியல்ல. விபத்தின் போது 1 ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்பதால் எங்கள் நிறுவனம் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

**x**

**சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.**